டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in


கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.10.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 109 - Madurai | Online Edition

# 25 மில்லியன் டாலர் மதிப்பில் கால்நடை பெருந்தொற்றுநோய் தடுப்பு நிதிய திட்டம்

## மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தொடங்கிவைத்தார்

புது தில்லி, அக்.25

மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங், கால்நடைகளுக்கு பெருந்தொற்றுநோய் தடுப்புக்கான நிதியத்தை புதுதில்லியில் 25.10.24ல் தொடங்கி வைத்தார்.

பெருந்தொற்றுநோய் நிதிய திட்டம் என்பது ஜி20 பெருந் தொற்றுநோய் நிதியத்தால் நிதியளிக்கப்பட்ட 25 மில்லியன் டாலர் மதிப்பிலான முன்முயற்சியாகும்.



இந்நிகழ்ச்சியில் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர்கள் பேராசிரியர் எஸ்.பி.சிங் பாகேல் மற்றும் ஜார்ஜ் குரியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தமது உரையில், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு கால்நடை துறையின் பங்களிப்பை எடுத்துரைத்தார். பல திட்டங்களை செயல் படுத்தியதன் மூலம் கடந்த 9 ஆண்டுகளில் கால்நடைத் துறை அபரிமிதமான வளர்ச்சியைக் எட்டியுள்ளது என்றும் அவர் கூறினார். தேசிய விலங்கு நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் (NADCP) மூலம், கோமாரி நோய் (FMD), புருசெல்லோசிஸ் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தி நாட்டிலிருந்து ஒழிப்பதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் கூறினார். இதுவரை, மொத்தம் 90.87 கோடி எஃப்.எம்.டி தடுப்பூசிகளும், புருசெல்லோசிஸுக்கு 4.23 கோடி தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.




இந்த நிகழ்ச்சியின்போது, இந்தியாவில் கால்நடை சுகாதார நிர்வாகத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரண்டு முக்கியமான ஆவணங்களையும் மத்திய அமைச்சர் வெளியிட்டார்.

நிலையான கால்நடை சிகிச்சை வழிகாட்டுதல்கள், விலங்கு நோய்களுக்கான நெருக்கடி மேலாண்மை திட்டம் ஆகிய இந்த ஆவணங்கள் கால்நடை மருத்துவர்கள், கொள்கை வகுப் பாளர்கள், கள அதிகாரிகளுக்கு முக்கிய வழிகாட்டிகளாக செயல்படும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நாமக்கல் வட்டாரத்தில் வேளாண்மை கூடுதல் இயக்குநர் ஆய்வு



நாமக்கல், அக்.25

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டாரத்தின் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், இதர மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் குறித்து வேளாண்மை கூடுதல் இயக்குநர், (ஆராய்ச்சி) அசோக்குமார் ஆய்வு செய்தார்.

மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் வழங்கியுள்ள சணப்பை பசுந்தாள் உர விதைகளை விதைத்து உள்ள வயல்களை ஆய்வு செய்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார். வட்டார விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் மின்கலம் தெளிப்பான்கள் வழங்கினார். வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருட் களின் இருப்பு விபரத்தை ஆய்வு செய்தார்.

மாவட்ட உயிரியல் கட்டுப்பாடு ஆய்வகம் மற்றும் மண் பரிசோதனை நிலையம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் கவிதா (மாநிலத் திட்டம்), கோவிந்தசாமி, (உழவர் பயிற்சி நிலையம்) வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா, வட்டார வேளாண்மை அலுவலர்கள் மோகன், காஞ்சனா, மண் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கலை ராணி, வேளாண்மை அலுவலர்கள் தரண்யா, செங்கோட்டு வேல், உயிரியல் கட்டுப்பாடு ஆய்வக வேளாண்மை அலுவலர் ஹரிதா, உதவி வேளாண்மை அலுவலர்கள் கோபிநாத் மதுமதி, தேவி ஆகியோர் உடனிருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இந்திய எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம் தெலுங்கானாவிற்கு பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா!

சேலம், அக்.25

எண்ணெய்வித்துப் பயிர்களில் உற்பத்தியினை பெருக்கும் நோக்கில் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள் தெலுங்கானா மாநிலத்திற்கு கண்டுணர்வு சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.



பனமரத்துப்பட்டி வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் 20 எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள இந்திய எண்ணெய்வித்துப் ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாயிகள் 5 நாள் பயணத்தை பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தொடங்கி வைத்து எண்ணெய் வித்துப் பயிர்களில் உற்பத்தியினை பெருக்கவும், பிற மாநிலங்களில் எவ்வாறு சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றி தெரிந்து கொண்டு அதனை நமது வட்டாரத்தில் கடைபிடிக்கவும் இது விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என தெரிவித் தார். மேலும் விவசாயிகள் தொடர்ந்து இந்திய எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்று எண்ணெய்வித்துப் பயிர் களான சூரியகாந்தி, நிலக்கடலை, ஆமணக்கு, கடுகு ஆகிய பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி பெருக்க கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை பற்றி முனைவர் துரைமுருகன், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். பயிற்சியில் பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 25.10.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 54 | 60 |
| 2 | வெண்டை | 42 | 46 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 37 | 40 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 40 | 46 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 75 | 80 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 35 | 42 |
| 6 | புடலை | 40 | 44 | 62 | நூல்கோல் | 32 | 38 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 30 | 34 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 20 | 24 |
| 9 | பாகற்காய் | 40 | 46 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 38 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 38 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 120 | 130 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 50 | 60 | 72 | குடமிளகாய் | 60 | 66 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 64 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 50 | 54 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 80 | 90 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 24 | 28 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 60 | 64 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 35 | 40 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 50 | 56 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# பவானி வட்டாரத்தில் வயல் விழா

ஈரோடு, அக்.25

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம்,வேளாண் உழவர் நலத்துறையின் மூலம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் வயல் விழா நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு வேளாண்மை அலுவலர் ஜெ.வனிதா தலைமை ஏற்று நடத்தினார்.

வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர், அமுதா கலந்து கொண்டு நிலக்கடலைப்பயிரில் இயற்கை வழியில் பூச்சி/நோய் களைகட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இயற்கை தாவரங்களான சிரியானங்கை,அ றிவால்மனை பூண்டு, நொச்சி, ஆடதோடா ஆகியவற்றை பயன்படுத்தி பூச்சி விரட்டிகரைசல் தயாரிக்கும் முறைகள், பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கிக் கூறினார். புங்க இலைசாறு மற்றும் வேப்ப எண்ணெய் ஆகியவற்றை பயன்படுத்தி சாறு உருஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள், தசகாவ்யம், பஞ்சகாவ்யம், பூண்டு – ப.மிளகாய், இஞ்சி கரைசல் தயாரித்தல் குறித்துவிளக்கிக் கூறினார்.

வேளாண்மைஅலுவலர் ஜெ.வனிதா கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் அவற்றை செயல்படுத்தும் முறைகள் குறித்தும், வயல் விழாவின் நோக்கம் குறித்தும், தெளிவாக எடுத்துரைத்தார். துவரை நாற்று சாகுபடி, மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் வரட்சியை கட்டுப்படுத்த கடை பிடிக்கப்பட வேண்டிய சாகுபடி தொழில் நுட்ப யுக்திகள் குறித்தும், இயற்கை பூச்சி விரட்டி தாவரங்களான வேம்பு, நொச்சி, ஆடாதோடா போன்ற நாற்றுகளை இலவசமாக விவசாயி களுக்கு வழங்கி அதன் பயன்கள் மற்றும் சாகுபடியின் அவசியம் குறித்தும் விளக்கிக் கூறினார்.

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கலந்து கொண்டு மஞ்சள், வாழை மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு பல்வேறு திட்டங்கள் மானியங்கள், மண்புழு குடில் அமைத்தல், துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் அவற்றை செயல்படுத்தும் முறைகள் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர், சோலார் பம்புசெட், நுண்ணீர் பாசனம், பண்ணைக் குட்டை அமைத்தல், இ–வாடகை, வேளாண் கருவிகள் மானியத்தில் பெற இணையவழியில் முன்பதிவு செய்தல் போன்றவை குறித்தும், துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

வேளாண் துணை அலுவலர் கலந்து கொண்டு மண் பரிசோதனை யின் அவசியம், PMKISAN–ல் பதிவு செய்யும் முறைகள் போன் றவை குறித்து விளக்கிக் கூறினார். பயறு வகைப்பயிர் சாகுபடி குறித்தும் விளக்கிக் கூறினார்.

மேலும் கால்நடை மருத்துவர், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தவாஜ், ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண் காணிப்பாளர், விதைச்சான்று அலுவலர் ஆகியோர் பயிற்சியில் கலந்து கொண்டு தங்கள் துறை யின் மூலம் வழங்கப்படும் திட்டங்கள், பதிவு செய்யும் முறைகள் போன்றவைகள் குறித்து எடுத்துரைத்தனர். இவ்விழாவில் விவசாயிகளுக்கு துண்டு பிரசுரங்கள் மற்றும் தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டது.



# எண்ணைவித்து பயிர்களில் அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி



திருச்சி, அக்,25

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டார விவசாயிகளுக்கு உள் மாநில அளவிலான அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் எண்ணைவித்து பயிர்கள் விவசாயிகள் பயிற்சி ஏத்தாப்பூர் அழைத்து சென்று பயிற்சி வழங்கப்பட்டது. இதில் யோக சித்ரா முதன்மை செயல் விளக்க திடல் அழைத்து சென்று ஆமணக்கு, மரவள்ளி சாகுபடி முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறப்பட்டது. அதன்பின் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற வெள்ளிவிழா மற்றும் கருத்தரங்கு கண்காட்சியில் விவசாயிகள் கலந்துகொண்டு ஆமணக்கு, மரவள்ளி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டினை இலால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார், லால்குடி வட்டார வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திரசேகர், விஸ்வநாதன், ராஜசேகரன், எடிசன், கவிதா, பிரவின் மற்றும் அட்மா திட்ட வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் சபரி செல்வன், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், அட்மா திட்ட உழவர் நண்பர்கள் ஆகியோர் செய்து இருந்தனர்.

மேலும் இப்பயிற்சியில் புதூர் உத்தமனூர், தச்சன் குறிச்சி, பூவாளூர், சிறுமயங்குடி, மருதூர், செம்பரை, கோமக்குடி, நகர், திருமங்கலம், வாளாடி கிராம முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERALS
• 100% LEAD FREE PIPE
• ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
• 25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
• 20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
• PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771

# காய்கறி பயிர்கள் உழவர் வயல் வெளிப் பள்ளியில் உழவர் வயல் தின விழா

பெரம்பலூர், அக்.25

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டாரத்தில் உள்ள அனுக்கூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசின் வேளாண்–விற்பனை மற்றும் வணிகத் துறையின் உதவியுடன் 34 விவசாயிகளை தேர்ந்தெடுத்து காய்கறி பயிரில் உழவர் வயல் வெளிப் பள்ளி நடத்தப்பட்டது. இந்த பள்ளி ஜூலை மாதம் தொடங்கி 14 வகுப்புகள் நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் காய்கறி பயிரில் விதை நேர்த்தி முதல் அறுவடை வரை உள்ள பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் மற்றும் பூச்சிகள் மற்றும் நோய்களை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் கட்டுப்படுத்துவது பற்றியும் விளக்கப் பட்டது.

இயற்கை இடுபொருட்களான பஞ்சகாவ்யா, தசகாவ்யா, இயற்கை மக்கி, மீன் அமினோ அமிலம், தாவரம் மற்றும் வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள், வயல் சூழல் ஆய்வின் முக்கியத்துவம், நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை இனம் கண்டறிதல், மண் பரிசோதனை மற்றும் விதை நேர்த்தியின் முக்கியத்துவம், உயிரியல் முறையில் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பல்வேறு பொறிகளின் பயன்பாடு பற்றியும் இந்த 14 வகுப்பு பயிற்சியில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பள்ளியின் இறுதி நிகழ்வாக உழவர் வயல் தின விழா 25.10.24 அன்று நடைப்பெற்றது. இவ்விழா–விற்கு மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் உதவி இயக்குநர் முனைவர் ச.சிவராம கிருஷ்ணன் தலைமை உரையாற்றினார். அதனை தொடர்ந்து பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் ஆர்.கோவிந்தராஜ் சிறப்பு உரையாற்றினார்.

இவ்விழாவில் பெரம்பலூர் மாவட்ட உழவர் சந்தை வேளாண் உதவி அலுவலர்கள் வி. குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அதனை தொடர்ந்து இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் இப்பயிற்சியினால் பெற்ற பயனையும் இப்பயிற்சி யினை மற்ற விவசாயிகளுக்கும் கொண்டு செல்வதைப்பற்றியும் விளக்கினர். இப்பயிற்சியினால் அனுக்கூர் கிராமத்தை சேர்ந்த 34 விவசாயிகள் பங்குபெற்று பயனடைந்தனர். இப்பயிற்சி மற்றும் இந்நிகழ்ச்சியினை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ஏ. சுருளிராஜன் ஒருங்கிணைத்து நடத்தினார்.



# மழையின் வரவை அறிவிக்கும் புன்னை மரம் பற்றி தெரியுமா?



ஒரு காலத்தில் கடற்கரையோரங்களில் அதுவும் நெய்தல் நிலங்களில் கூட்டமாக கூட்டமாக இருந்து வந்தது புன்னை மரம். இதனுடைய அறிவியல் பெயர் (CALOPHYLLUM UNOPHYLLUM). இன்றைக்கு நகர விரிவாக்கம், சாலை விரிவாக்கம் என்ற பெயரில் பெரிய பெரிய மரங்கள் வீழ்த்தப்படுகின்றன. இதனால் பல வகையான மரங்கள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த புன்னை மரம் அழியும் நிலையில் உள்ளது.

அந்த காலத்தில் மின்சார இல்லாத காலத்துல புன்னை கொட்டை எண்ணெய் விளக்கு எரிக்கவும் தண்ணிய இறைக்க டீசலுக்கு பதிலாக இந்த எண்ணெய் (TAMANU SEED OIL) பயன்படுத்தப்பட்டு வந்ததிலிருந்து புன்னை மரத்தின் பயன்பாடு நாம் அறிந்ததே. ஆனால் இன்றைய தலைமுறைகள் அது பற்றிய தெரியாத நிலை தான். அதனுடைய பயன்பாடும் படிப்படியாக குறையத் தொடங்கின.

## புன்னை மர வளர்ப்பு

இது அனைத்து வகையான மண்ணிலும் வளரும் என்றால் அதிகமாக காணப்படுவது கடலோர பகுதியில் தான். புன்னை மரத்தடியில் அமரும் போது அதிக அளவிலான பிராணவாயு கிடைப்பதால் சுவாசத்தை சீராக்கி, மன அழுத்தத்தை போக்கி புத்துணர்வு பெற வைக்கும் என்கிறார்கள் தாவர வல்லுநர்கள். இந்த மரம் புயலுக்கு சாயாது, பூச்சி அரிக்காது என்பதால் அந்த காலத்துல கட்டுமரம், கப்பல் கட்ட பயன்படுத்த பட்டது. இந்த மரம் அதிகமாக இருந்ததால் தான் கடந்த சுனாமி பேரலை பிச்சாவரத்தை காப்பற்றியதாக கூறுகின்றனர்.

## புன்னை மரம் மழை வரவை தெரிவிக்குமா? என்ன?

புன்னை மரத்தில் மலர்கள் அதிக அளவில் பூத்துக் குலுங்கினால் அந்த பகுதியில் நிச்சயமாக மழை பொழிவு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

புன்னை மரம் 5 ஆண்டிலே பூத்து காய்க்க தொடங்கும். தொடக்கத்தில் 5 கிலோ முதல் 20 கிலோ வரை பருப்பு (விதை) கிடைக்கும். அதிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு விளக்கு எரிய உதவுகின்றன. அதனுடைய புண்ணாக்கு விவசாய நிலங்களுக்கு உரமாக (ORGANIC FERTILIZERS) பயன் படுத்தபடுகிறது.

**புன்னை மரத்தை பற்றி சங்க இலக்கியங்கள் என்ன கூறுகின்றன தெரியுமா?**

புன்னை மரத்தை பற்றி நிறைய பாடல்களை சங்க கால புலவர்கள் பாடியுள்ளனர். அதில் இந்த பாடலும் ஒன்று, ‘இரும்பின் அள்ள கருங்கோட்டு புன்னை நிலத்தன்ன பாசிலை அகந்தொறும்வெள்ளியன்ன‘ என்று நாற்றினை 249 பாடல் விளக்கிறது.




**புன்னை மரத்தை பற்றிய திரைப்பட பாடல் உண்டா?**

‘புன்னை மரம் ஒன்னு தென்னை மரம் ஒன்னு
கிட்டகிட்ட நின்னு கொஞ்சுதம்மா கன்னு: ‘

**புன்னை மரத்தின் பெயரில் ஊர் உண்டா?**

தஞ்சாவூரில் உள்ள மாரியம்மன் கோவில் வளாகத்தில் அதிக அளவாக புன்னை மரங்கள் இருந்தால் அந்த பகுதியை ‘புன்னை நல்லூர் என்று இன்றும் அழைக்கப்படுகின்றன.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த புன்னை மரம் அழிவின் விளம்பில் உள்ளது. இதனை சாகுபடி விரிவாக்கம் செய்து இதனுடைய பயன்பாட்டை (நன்மைகள்) எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினால் சுற்றுப்புற சூழல் பாதிக்காத புன்னை மரத்தை உற்பத்தி செய்வோம்..

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அங்கக வேளாண்மையில் நூற்புழு மேலாண்மை

● பயிர்களில் பூச்சி மற்றும் நோய்க்கு இணையான சேதாரத்தை நூற்புழுக்களும் விளைவிக்கின்றன.

● கோடை உழவு செய்வதன் மூலம் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

● மண்ணை மூடாக்கு போட்டு வெப்பமூட்டுதல் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● வேப்பம் புண்ணாக்கு ஒரு எக்டருக்கு 250 கிலோ இடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● ஊடுபயிராக துலுக்க சாமந்தி, வெங்காயம், சணப்பு, கொத்தமல்லி, பூண்டு ஆகியவற்றைப் பயிரிடுவதால் கட்டுப் படுத்தலாம்.

● நாற்றங்கால் படுக்கைகளில் NSKE 5% தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● பேசிலோமைசிஸ் லிலாசினஸ் (1% WP) உயிர் நூற்புழுக் கொல்லியை கீழ்கண்டவாறு பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

1. விதைநேர்த்திக்கு 1 கிலோ விதைக்கு 10 கிராம் உயிர் நூற்புழு கொல்லி பயன்படுத்த வேண்டும்.

2. ஒரு லிட்டர் நீரில் 100 கிராம் உயிர் நூற்புழு கொல்லி கலந்து நாற்று நனைக்க பயன்படுத்த வேண்டும். எக்டருக்கு 5 கிலோ உயிர் நூற்புழு கொல்லியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்ட முறைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்தும்போது அங்கக வேளாண்மையில் சிறந்த நூற்புழு கட்டுப்பாடு கிடைக்கும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

செங்கல்பட்டு, அக்.25

செங்கல்பட்டு, கோட்டை கடபாக் கத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ, கள அதிகாரி, காளிதாசன் பல்வேறு பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா மற்றும் இதர உரங்கள் பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார்.

மேலும், ரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண்வளம் குறையும் என்றும் மண்வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும் இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றும் நானோ உரங் களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார்.

மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயி களுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.200000 வரை காப்பீடு பெறலாம் என்றார்.

பின், இந்திய அரசின் தூய்மை இந்தியா பிரச்சாரத்தின் கொள்கைகளை விளக்கினார்.



# திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், அக்.25

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் 2024-25ம் நிதியாண்டிற்கு விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராமம் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வாகியுள்ள பூவாணி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகள் பயிற்சி (ராபி பருவம்) 23.10.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் திருவில்லிபுத்தூர் வட்டார வேளாண்மை அலுவலர் கி.குருலட்சுமி தலைமையேற்று தொழில்நுட்ப உரை வழங்கினார். இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறையில் செயல் படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார். முருகேசன், வேளாண்மை அலுவலர், நடமாடும் மண் பரிசோதனை நிலையம், விருதுநகர், மண் மாதிரி சேகரிப்பு முறைகள் மற்றும் பயன்கள் பற்றி எடுத்துரைத்தார். தோட்டக்கலை துறையின் உதவி தோட்டக்கலை அலுவலர் சித்திரைசெல்வி, தோட்டக்கலை துறையின் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் குருசாமி, பட்டு வளர்ச்சி துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடாசலம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார். திருவில்லிபுத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மேற்பார்வையாளர் மு.பொன்னுச்சாமி, விற்பனை நிலவரம் குறித்து விவரித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பு.ஜோதி மஞ்சுளா, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் உ.கிருஷ்ணலீலா, கலைஞரின் அனைத்து கிராம திட்டத்தின் கீழ் பூவாணி கிராமத்திற்கு நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக பேசி நன்றியுரை கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தரமான விதை உற்பத்தி செய்திட விதை பண்ணை விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி



தஞ்சாவூர், அக்,25

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரத்தைச் சேர்ந்த விதை பண்ணை விவசாயிகளுக்கு மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை மூலம் ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் 24 .10 .24 அன்று வழங்கப்பட்டது. தஞ்சாவூர் வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) ச.மாலதி, பயிற்சிக்கு தலைமையேற்று தற்போது நடைமுறையில் உள்ள மத்திய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

இப்பயிற்சியில் தஞ்சாவூர் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குனர் து.கோபால கிருஷ்ணன், விதை பண்ணைகளில் களை நிர்வாகம், உரம் மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்த தொழில் நுட்பங்களை கூறி அவற்றை உரிய காலத்தில் தகுந்த அளவில் பயன்படுத்தி விதை பண்ணை விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற்று லாபம் பெற வேண்டும் என்றும் அறுவடைக்குப்பின் விதை குவியல்களை முளைப்புத் திறன் பாதிக்காத வண்ணம் பாதுகாக்கும் முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

பட்டுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சன்மதி விதைப்பண்ணை விவசாயிகளுக்கு மாநிலத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், மானியத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் குறித்தும் மேலும் மண்ணின் வளத்தை மேம்படுத்தி தரமான விதை உற்பத்திக்கு வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பட்டுக்கோட்டை விதை ஆய்வாளர் முனைவர் எம். நவீன் சேவியர், நெல் சாகுபடி செய்ய பருவத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார் .

பட்டுக்கோட்டை வேளாண் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சுபா, விதை உற்பத்தி முறைகள் மற்றும் விதை பெருக்க நிலைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

தஞ்சாவூர் ரிலையன்ஸ் பவுண்டேசன் திட்ட மேலாளர் கார்த்திகேயன் நெற்பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

பட்டுக்கோட்டை விதைச்சான்று அலுவலர் சா.சங்கீதா, விதைப்பண்ணையில் கலவன்கள் இல்லாமலும் புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை, முளைப்புத்திறன் பாதிக்காதவாறு தரமான விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

மேலும் தரமான விதைகளை உற்பத்தி செய்ய கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விளக்கினார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

இப்பயிற்சியில் பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரத்தில் உள்ள அனைத்து விதைப்பண்ணை விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் கண்காட்சி அமைக்கப்பட்டு விவசாயிகள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர்கள் பட்டுக்கோட்டை வட்டார ஜெய்சங்கர், வீரசிங்கம் மற்றும் மதுக்கூர் வட்டார உதவி விதை அலுவலர்கள் பூபேஷ், இளங்கோ ஆகியோர் செய்திருந்தனர்.

தகவல் : **து.கோபாலகிருஷ்ணன், விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறை உதவி இயக்குனர், தஞ்சாவூர்.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
• 100% LEAD FREE PIPE
• ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
• 25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
• 20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
• PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771

# உசிலம்பட்டி வட்டார சமுதாயத்தில் நலிவடைந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மேம்பட்ட

# மூலிகை பயிர்கள் சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதல்




மதுரை, அக்.25

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டாரத்தில் உள்ள நலிவடைந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மூலிகை பயிர்கள் சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதல் என்ற திட்டமானது முனைவர் இரா.ரேணுகா, பேராசிரியர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், அவர்களால் 2020-ஆம் ஆண்டில் மாநில திட்டக் குழுவின் (SPC) கீழ் உள்ள சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (SADP) மூலம் நிதி உதவி பெறப்பட்டது. ரூ.60.65 லட்சம் நிதியுதவியுடன் கடந்த 4 வருடங்களாக இத்திட்டத்தின் கீழ் 100-க்கும் மேற்பட்ட உழவர்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு சிறு குறுஞ்சான் போன்ற மூலிகைப் பயிர்கள் மற்றும் முருங்கை விதைகள் வழங்கி அதற்கான சாகுபடி பயிற்சிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்தில் உள்ள வாசிமலையின் மூலிகைப் பயிர்களைப் பற்றி தரவுத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தரவுத்தளத்தின் அச்சுறுத்தப்பட்ட பல அரிய மூலிகைப் பயிர்கள் கண்டறியப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ரூ.25 லட்சம் மதிப்புள்ள மூலிகைப் பயிர்கள் பதப்படுத்தும் மற்றும் மதிப்புக்கூட்டுதலுக் கான கட்டிடம் உசிலம்பட்டியில் உள்ள செட்டியபட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் ரூ.16 லட்சம் மதிப்புள்ள மூலிகை பதப்படுத்தும் இயந்திரங்களான மின் உலர்த்தி, மூலிகைப்பொடி அரைக்கும் இயந்திரம், வறுக்கும் இயந்திரம், மின் அம்மி மற்றும் பைகளை மூடும் மற்றும் தைக்கும் இயந்திரம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரங் களை இயக்குவதற்கு தேவையான 50 கிலோ வாட் மின் இணைப்புக்காக பிரத்யேகமான மின் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ், செட்டியப்பட்டி அருகிலுள்ள குறிஞ்சி நகரில் உள்ள பழங்குடியின மக்களை இணைத்து உசிலம்பட்டி மற்றும் சேடப்பட்டி வட்டார குறிஞ்சிமலை பழங்குடியின மக்களுக்கான பெரிய அளவிலான பல்நோக்கு கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சங்கத்தின் மூலம் உழவர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் தயாரிக்கும் மூலிகைப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்காக பல வகையான தொழில் முனைவோருடன் தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டி வட்டாரத்தை பொறுத்தவரை இதுவே முதல்முறையாக ஏற்படுத்தப் பட்ட மூலிகை சார்ந்த தொழிற் சாலையாகும். உசிலம்பட்டி மற்றும் சேடப்பட்டி வட்டார உழவர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் தாங்கள் சேகரிக்கும் மூலிகைகளை இங்குள்ள இயந்திரங்களை பயன் படுத்தி பதப்படுத்தி மற்றும் மதிப்புக்கூட்டி விற்பதன் மூலம் அதிக லாபம் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக இந்த மையம் அமைந்துள்ளது.

அருப்புக்கோட்டை, விவசாய ஆய்வு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் செல்விரமேஷ் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



# விசாலாட்சி அம்மாள் சமுத்திரம் கிராம வேளாண் முன்னேற்றக்குழு கூட்டம்

திருச்சி, அக்.25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டாரம், விசாலாட்சி அம்மாள் சமுத்திரம் கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, துறையூர் வட்டாரத்தின் சார்பாக வயல் விழா நடத்தப் பட்டது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் (2024-25) செயல்படுத்தப்பட்ட துறையூர் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த விசாலாட்சிஅம்மாள் சமுத்திரம் கிராமத்தில் உழவர்களுக்கு வயல் விழா 24-10-24 அன்று நடை பெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் வசந்தாதேவி கணேசன் தலைமையேற்று நடத்தினர். துறையூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கமல், முன்னிலை வகித்து பாரதப் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம், வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை, இடுபொருள் இருப்பு மற்றும் மானியங்கள், வேளாண்மை விரிவாக்க மையமானது தற்போது உழவர் சந்தையில் உள்ள பருத்தி குடோனில் செயல்படுவதாகவும், விவசாயிகள் அங்கு வந்து இடுபொருட்களை பெற வேண்டுமாயும் கேட்டுக் கொண்டார். இந்த விவசாயிகள் பயிற்சியில் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் பூச்சியியல் துறை, உதவி பேராசிரியர் முனைவர் செ.பழனிவேல் கலந்து கொண்டு நெல், பருத்தி, மக்காச்சோளம், மிளகாய் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, ரசாயன மருந்துகளை தவிர்த்து இயற்கை முறையில் சாறு உறிஞ்சும் பூச்சிகள், கடித்தும் சுரண்டியும் சாப்பிடும் புழுக்கள், வேர் பகுதியில் அழிவை ஏற்படுத்தும் நூற்புழுக்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை உதவி அலுவலர் சாமிநாதன், பேசுகையில், உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனைகூடம், தேசிய மின்னணு வர்த்தகம், மதிப்புகூட்டல் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் கௌசல்யா, கலந்து கொண்டு வேளாண்மை துறையின் மானிய திட்டங்களை எடுத்துக்கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன் அட்மா திட்ட பயன் பாடுகள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும்சரண்யா நன்றியுரை கூறினார். பயிற்சியில் விசாலாட்சிஅம்மாள் சமுத்திரம் கிராமத்தைச் சார்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# கறவை மாடுகளில் பேறுகாலமும் பராமரிப்பும்



கால்நடை வளர்ப்பில் முக்கியமான காலகட்டம் பேறுகால பராமரிப்பாகும். கறவை மாடுகளில் சினை மாடுகளைத் தனிக்கவனம் செலுத்திப் பராமரிக்க வேண்டும். இதன் மூலம் சினை மாடுகளில் ஏற்படும் கருச்சிதைவு, கருப்பைச் சுழற்சி, கருப்பை வாய் வெளித்தள்ளுதல் மற்றும் கருப்பையில் நீர்கோர்த்தல் போன்றவற்றினால் ஏற்படும் பொருளாதார இழப்பைத் தடுக்கலாம். மேலும் சினை மாடுகளில் தீவன முறையில் தனிக்கவனம் செலுத்துவதன் மூலம் நல்ல வளமான கன்றினைப் பெறலாம்.






விவசாயிகள் தங்கள் மாடுகளுக்குச் சினை ஊசி போட்ட தேதியினைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், சினையடையாத மாடுகள் சினை ஊசிபோட்ட 21 நாட்களுக்குப் பின் சினைப் பருவத்திற்கு வரும். அவ்வாறு சினைப் பருவத்திற்கு வரும் மாடுகளை மீண்டும் செயற்கை முறைக் கருவூட்டல் செய்தல் வேண்டும். சினைப் பருவத்திற்கு வராத மாடுகளை, சினை ஊசிபோட்ட 60 நாட்கள் கழித்துக் கால்நடை மருத்துவரின் உதவி கொண்டு சினைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

### சினைக்காலம்

பசு மாடுகளில் சினைக்காலம் 270 முதல் 280 நாட்கள். எருமை மாடுகளில் சினைக்காலம் 300-310 நாட்கள். மாடுகளுக்கு சினை ஊசிபோடப்பட்ட தேதியினைக் குறித்து வைப்பதின் மூலம் சில மாடுகளில் தோன்றும் நீடித்த சினைக் காலத்தை அறிந்து தக்க சிகிச்சை அளிக்க இயலும்.

## பேறுகாலத் தீவனம்

மாடுகள் சினையடைந்த 5 மாதங்களுக்குப் பிறகு அதன் தீவனத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். சினை மாடுகளுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 3 கிலோ அடர் தீவனமும், 10 கிலோ பசுந்தீவனமும், 4 கிலோ உலர் தீவனமும் (வைக்கோல்) கொடுக்க வேண்டும்.

கறவை மாடுகள் சினையடைந்த 7 மாதங்களுக்குப் பின், பால் கறவையை நிறுத்திவிட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பால் கரக்கச் செலவழிக்கும் சத்தினைக் கருப்பையில் வளரும் கன்றின் வளர்ச்சிக்குப் பகிர்ந்து கொள்ள இயலும். தீவனத்தை அதிகரித்துக் கொடுப்பதன் மூலம் அடுத்து வரும் ஈற்றில் பாலின் அளவு அதிகரிப்பதோடு, திடமான, ஆரோக்கியமான கன்றினையும் பெறலாம்.

## கருச்சிதைவு

சினை மாடுகளில் பல காரணங்களால் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவற்றுள் நோய்க் கிருமிகளால் ஏற்படும் கருச்சிதைவு மிகவும் கவனிக்கத்தக்கதாகும். தொற்று நோய்க் காரணிகளை எடுத்துக் கொண்டால், அவை புருசெல்லா அபார்டஸ், லெப்டோஸ்பைரா, காசநோய்க் கிருமி மற்றும் விப்ரியோ போன்ற பாக்டீரியாக்களினால் கருச்சிதைவு ஏற்படுகிறது.

ஐ.பி.ஆர், ஐ.பி.வி, கோமாரி நோய் மற்றும் வெக்கை நோய் போன்ற வைரஸ் கிருமிகளால் கருச்சிதைவு ஏற்படுகிறது. பூஞ்சை மற்றும் இரத்த ஓரணு ஒட்டுண்ணிகளினாலும் கருச்சிதைவு ஏற்படுகிறது.

ஏனெனில் இந்நோய்க் கிருமிகள் கருச்சிதைவு ஏற்படுத்துவது மட்டுமின்றி அடுத்து வரும் காலங்களில் நிரந்தர அல்லது தற்காலிக மலட்டுத் தன்மையினையும் தோற்றுவிக்கின்றன. தொற்று நோய் அல்லாத காரணிகளை எடுத்துக் கொண்டால், தகுந்த ஊட்டச்சத்து இல்லாத தீவனம் அளித்தல், தவறுதலாகச் சினை மாடுகளை மறுபடியும் கருவூட்டல் செய்வது அல்லது காளை மாடுகளைக் கொண்டு இனச்சேர்க்கை செய்தல் மற்றும் பாரம்பரிய குணாதிசயங்களினாலும் கருச்சிதைவு ஏற்படுகிறது. சினைக் காலத்தின் பொழுது, மாடுகள் ஒன்றுக்கு ஒன்று முட்டிக் கொள்ளும்பொழுதும், கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, இவ்வாறு கருச்சிதைவுக்குள்ளான மாடுகளைக் கால்நடை மருத்துவரைக் கொண்டு பரிசோதித்துத் தக்க சிகிச்சை அளித்திட வேண்டும்.

### கருப்பையில் நீர்கோர்த்தல்

சினைமாடுகளில் குறிப்பாக கலப்பினப் பசுக்களில் முற்றிய சினைக் காலத்தில் கருப்பையில் ஏற்படும் சில கோளாறுகளால் கருப்பையில் நீர்கோர்த்தல் ஏற்படுகிறது. இந்நோயால் பாதிக்கப் பட்ட மாடுகளில் வயிறு சாதாரணமாக இருப்பதைப் போன்று தோற்ற மளிக்கும். மாடு வழக்கத்தைவிட அதிகமாக நீர் அருந்துவதோடு எழுந்து நடக்கச் சிரமப்படும். இத்தகைய மாடுகளைக் கன்று ஈனும் வரை விட்டுவிட்டால் கன்று ஈனும் சமயத்தில் 60 முதல் 80 லிட்டர் வரை நீர் கருப்பையிலிருந்து வெளியேறும். கன்று மிகவும் குறைந்த எடையுடனும், பெரும்பாலான சமயங்களில் இறந்தும் பிறக்கும். கருப்பையிலிருந்து நீர் வெளியேறிய பின்பு, மாடு மிகவும் மெலிந்து தோன்றும். நஞ்சுக்கொடி தானாக விழுவதில்லை. மிக அதிகமான நீர் உடலில் இருந்து வெளியேறுவதால் சில மாடுகள் இறக்கவும் கூடும். இதனைத் தவிர்க்கச் சினை மாட்டின் கருப்பையில் நீர் கோர்த்தல் பாதிப்பு உள்ளது எனச் சந்தேகப் பட்டால், கால்நடை மருத்துவரைக் கொண்டு பரிசோதித்து 5 முதல் 6 மாத சினையிலேயே கன்று ஈனச்செய்வதால் தாய்ப்பசுவின் உயிரைக் காப்பாற்றலாம்.

### கருப்பைச் சுழற்சி

சினை மாடுகளைக் கரடுமுரடான பாதைகளில் நடக்க விடாமலும், மேடு பள்ளங்கள் மற்றும் சரிவுகளில் மேயவிடாமலும், மற்ற மாடுகளுடன் சண்டை போட விடாமலும் பராமரிப்பதன் மூலம் சினைமாடுகளில் ஏற்படும் கருப்பைச் சுழற்சியினைத் தவிர்க்கலாம்.

### கருப்பை வாய் வெளித்தள்ளுதல்

சில மாடுகளில், 6 மாத சினைக்குப் பின்பு கருப்பை வாய் வெளித்தள்ளுதல் தென்படும். கருப்பை வாய் வெளித்தள்ளிய மாடுகள் மண்தரையில் படுக்கும்போது கருப்பையின் வாய்ப்பகுதியில் காயம் ஏற்பட்டு எரிச்சல் உண்டாகும். இதனால் மாடுகள் அதிகம் முக்குவதால், கருப்பை மேலும் அதிகமாக வெளிவரும். வெளித்தள்ளிய கருப்பையில் காயம் ஏற்படுவதாலும் மற்றும் கோழி, காக்கை போன்றவை கொத்த வாய்ப்பிருப்பதாலும் உடனடியாகக் கால்நடை மருத்துவரைக் கொண்டு கருப்பையை உள்ளே தள்ளித் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

**நாளை தொடரும்...**

தகவல் : **முனைவர் கோ.இராஜராஜன், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை - 642 205, திருப்பூர் மாவட்டம்.**